ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# மலைகளில் வாழும் மகத்துவ அரசர்கள் - தமிழக பழங்குடியினர்கள்

ஜெ . கார்த்திகா,
ஆராய்ச்சி அறிஞர், வரலாற்றுத் துறை, பிஜி மற்றும் ஆராய்ச்சி மையம்,
வி.வி.வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரி,
விருதுநகர்-626001. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஏ.எஸ். பி. மலர்விழி,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
முதுகலை மற்றும் ஆராய்ச்சி மையம்,
வி.வி.வன்னியப்பெருமாள் மகளிர் கல்லூரி,
விருதுநகர்-626001. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுச் சுருக்கம்

உலகில் பல்வேறு இன மக்கள் வாழ்ந்தாலும் பழங்குடியின மக்கள் போன்று சிறப்பான மக்களை காண முடியாது. இயற்கை தன்னை உருவாக்கிய காலத்தில் இருந்து அதனை முழுமையாக இயற்கை தன்னை மாறாமல் அவற்றை அதன் தன்மையாகவே வளரச் செய்து இன்றளவும் காத்து வருவது பழங்குடியின மக்கள் இனமே காரணம் ஆகும். இக்கட்டுரையில் தமிழகத்தில் உள்ள பழங்குடியின மக்களின் சிறப்பும் அவர்களின் சமூக, கலாச்சார ,பண்பாட்டு, மொழி ,கல்வி வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளவும் ,அவர்களின் வளர்ச்சி இன்றளவும் எவ்வாறு காணப்படுகிறது என்பதையும் அறியப்படுகிறது. இக்கட்டுரையின் ஆய்வானது அழிந்து வரும் நம் நாட்டின் பலம் பெறும் பொக்கிஷங்களை எவ்வாறு பழங்குடி மக்கள் மாறாது கடைபிடிக்க செய்கின்றன என்பதையும், அவை மற்ற இனங்களுக்கு முன்னோடியாகவும் அவற்றை பாதுகாப்பது பற்றிய முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது.


*Key words:* பழங்குடி, சமூகம், கலாச்சாரம், வாழ்க்கை முறை, பிரச்சனைகள்

## முன்னுரை

பழங்குடியின மக்கள் பூமியில் மக்கள் தோன்றிய காலம் முதல் இன்றும் சிறு பிரிவுகளாக பிரிந்து மலைப்பகுதிகள் காட்டுப் பகுதிகளில் வசித்து வரும் ஒரு இனம் ஆகும்.இவர்கள் தங்களின் வாழ்க்கை முறையினை தங்களை சுற்றியுள்ள செடி, கொடி ,மரங்கள் ,விலங்குகள் மற்றும் தங்களுக்கென தனி பழக்க வழக்கங்கள், மொழி, உடை ,உணவு கொண்டு தங்களது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் தமிழகத்தை பொறுத்தவரையில் 3.5% பழங்குடி மக்கள் வசித்து வருகின்றனர். முதன்முதல் எக்கர் டஸ்ட் டன் என்பாரும் பின்னர் கிருஷ்ண ஐயர் , முனைவர் ஐயப்பன் போன்றோரும் பழங்குடியினர் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

## தமிழக பழங்குடிகள்

இந்தியாவில் மொத்தம் 537 வகையான பழங்குடியின மக்கள் இனம் வசிக்கின்றனர். அதன்படி 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 6,51,321 மக்கள் தொகை கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 38 வகையான பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். அவர்களின் 27.9% கல்வி அறிவு பெற்றவர்கள் ஆவார்கள்.




| பழங்குடியின பெயர் | வாழும் பகுதி | மொழி |
|---|---|---|
| இருளர் | கோவை, சேலம், நீலகிரி | இருள மொழி |
| ஊராளி | நீலகிரி(சத்தியமங்களம்) | மலையாளம் கலந்த தமிழ் |
| காட்டுநாயக்கர் | நீலகிரி, கூடலூர், ஊட்டி | கன்னடம் |
| காணிக்காரர் | கண்ணியாகுமரி | மலையாளம் கலந்த தமிழ் |
| குறும்பர் | நீலகிரி, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை | குறும்பு மொழி |
| கொச்சுடவேலன் | நீலகிரி | மலையாளம் |
| பளியர் | மதுரை, ராமநாதபுரம் | தமிழ் |
| புலையர் | பழனி. மலைக்குன்றுகள், ஆனைமலை | தமிழ் |
| மலையாளி | சேர்வதால் மலை, கொள்ளி மலை, ஏலகிரி | தமிழ் |
| தோடர் | நீலகிரி | தோடர் மொழி |
| மலை மலசர் | பொள்ளாச்சி | தமிழ் |

உணவு பழங்குடியினரின்

உணவு பழக்க வழக்க முறையானது இன்று மாறாத பழமை வாய்ந்த சக்தி மிக்க உணவுகளையே உண்ணுகின்றனர் குறிப்பாக சாமை, வரகு, சோளம், கம்பு, சேப்பங்கிழங்கு, பலாப்பழம் ,கிழங்கு வகைகள், கீரை வகைகள், பழங்கள், காய்கறிகள், பன்றி, உடும்பு, ஈரல், காட்டு முயல், இறைச்சி மற்றும் ஆட்டு இறைச்சி என பல வகையானவை எடுத்துக் கொள்கின்றனர் அவை பாரம்பரிய முறைகளிலேயே தயாரிக்கின்றனர்.



பழங்குடியின மக்களின் உடைகள்

பெரும்பாலும் கைகளால் நெய்யப்பட்ட உடைகளையே அணிகின்றனர். மேலும் அவை வேலைபாடுகள் கொண்ட உடைகளை நேர்த்தியாக அணிகின்றனர். ஆண் பெண் இருபாலரும் உடைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அவர்களின் ஆடைகள் பெரும்பாலும் கம்பளி, பருத்தி, மிருகங்களின் தோல்கள், மர பட்டைகள் போன்றவைகள் பயன்படுத்துகின்றன. ஆண்களும் பெண்களும் அணிகலன்கள் அழிவதில் விரும்பி அணிந்து கொள்கின்றன குறிப்பாக தங்கம், வெள்ளி, செம்பு,முத்து, அரிய வகை கற்கள் மற்றும் கடல் பாசி ,சங்கு, சிப்பி போன்றவற்றை அணிகலன்களாக அணிகின்றனர்.

பழங்குடியினரின் இருப்பிடங்கள்

பழங்குடியின மக்கள் தனிச்சிறப்புகளில் ஒன்று அவர்கள் வாழும் இடமாகும் சில குழுவினர்கள் தங்களை சார்ந்தவர்களை குழுவாக அமைத்து தங்கள் இருப்பிடம் அமைப்பர் மேலும் பல்வேறு இன குடிகளாக வாழும் அவர்கள் அடர்ந்த மலை பாங்கான இடங்களில் மரங்களில் மேல் மரத்தாலான வீடுகள் குகைகள் போன்றவற்றை அமைத்து வாழ்கின்றனர் தற்போது அவர்களும் கூரை வீடுகள் ஓட்டு வீடுகள் கல் கட்டிடங்கள் தங்களது வசதிக்கு ஏற்ப மாற்றி அமைத்துள்ளனர் இம் மக்களின் இருப்பிடங்களாக ஓர், நாடு, குண்டம், குடி,சேரி, புதி,பட்டி, பள்ளி, காண்டவம் என பல பொருள் கொண்ட பெயரால் அழைக்கின்றனர் பழங்குடியினரின்.



பழங்குடியினரின் தெய்வ நம்பிக்கை

மரபு வழியாக வந்த பழங்குடியின பழக்கவழக்கங்களில் ஏதேனும் கலப்பு இருக்கிறதா என்பதை காணக்கூடிய அளவுகோலாக இருப்பது பழங்குடியின மக்களின் பண்பாடான தெய்வ நம்பிக்கை ஆகும். தெய்வங்களை "அம்மன் கோயில்" என்றும் ஆண் தெய்வம் கோயில்கள் "அய்யங்கோயில்" என்றும் அழைக்கின்றனர். மேலும் வயல்வெளிகளிலும் காடுகளிலும் கன்னிமார் தெய்வங்களை வணங்கினர். உருவ வழிபாடும், இயற்கையையும் தங்களது தெய்வமாக வணங்குகின்றனர்.

பழங்குடி இன மக்களின் பயன்படுத்தும் மருத்துவ வகைச் செடிகள்

அற்றளி (நடுக்கி) ,உன்னிச்செடி (தூசி), உத்தாமன (வேலிப்பருத்தி), காக்கணம் (ம்வெள்ளை காக்கணும் ) ,காட்டு முருங்கை (காட்டு முருங்கி),காட்டுல்லி (காட்டுல்லி), கீழாநெல்லி ,கொள்ளு ,சிறு தும்பை ,கொத்தஸ் (திபு), சிறு நெருஞ்சி (நெருஞ்சி), சீரகம், சுடக்கு தக்காளி (உரித்த துவர்), தண்ணீர் விட்டான் கிழங்கு (சதாவரி), தான்றிக்காய் (கடுக்காய் ),தேன் கொடுக்காய்( நாக விடாக்காய்).

சமூக இடர்பாடுகள்

கற்றல் இடர்பாடுகள்

பழங்குடியினம் மக்களை பொருத்தவரையில் அவர்களின் சுற்றுச்சூழல் உள்ளிட்ட செயல்பாடுகளில் மட்டும் கவனம் செலுத்துவதால் கல்வி பற்றிய முழுமையான முக்கியத்துவத்தினை பெறவில்லை. எனினும் தற்போது இம்மக்கள் கல்வி மற்றும் கல்வி சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். எனினும் போக்குவரத்து ,கல்வி கட்டணம் ,சரியான வழிகாட்டுதல் ,கல்வியின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பற்றிய தடைகள் இன்றளவும் அவர்களை வளர்ச்சி அடைய விடாமல் தடுக்க செய்கின்றன.



பொருளாதார பிரச்சினைகள்

விவசாயம் தொடர்பான தொழில்கள் கால்நடை வைத்தல் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ,கைவினைத் தொழில், தோட்டத்தொழில், பண்ணை தொழில், காபி, தேயிலை விவசாயம் போன்ற அவர்கள் செய்து வருவதால் அவர்களின் அத்தியாவசியமான முழுமையான தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது வாழ்கின்றனர்.



இருப்பிடம் சார்ந்த பிரச்சனைகள்

பழங்குடியின மக்கள் தங்களது இருப்பிடங்கள் பெரும்பாலும் காடுகளுக்கு உள்ளேயும், வீடுகள் பெரும்பாலும் நெருக்கமான இடங்களில் இல்லாமல் ஆங்காங்கு தொலைவில் காணப்படுவதால் குடிநீர் வசதி ,மின்சாரம் ,போக்குவரத்து வசதிகள் இல்லாமல் வசிக்கின்றன. மேலும் மலைப்பகுதிகளில் வசிப்பதால் காலநிலை மாற்றங்களின் போது நிலச்சரிவு, காட்டுத்தீ போன்ற பேரிடர்களும் ஏற்படுகின்றன. இதனால் அவர்களுக்கு எளிதாக மருத்துவ உதவிகளோ, மருத்துவ சேவைகளோ கிடைக்காமல் சில நேரம் அவதிக்குள்ளாகின்றனர்.

சுகாதார பிரச்சனைகள்

சுகாதாரம் பொருத்தவரையில் பழங்குடியினர் இயற்கையில் இருந்து கிடைக்கும் மூலிகை மூலமாகவே இயற்கையாக தங்களை காத்துக் கொள்கின்றனர் எனினும் தொற்று நோய்களான சின்னம்மை, காலரா, டெங்கு காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களிலிருந்து தங்களை காத்துக் கொள்ள மருத்துவமனையை நாடாமல் கை வைத்தியத்தின் மூலமாக தவறான சிகிச்சை மூலமாகவும் உயிரிழப்பு போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன. மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் பொறுத்த வரைக்கும் ஊட்டச்சத்து குறைபாடுகள் பெரும்பாலும் காணப்படுகின்றன.



முடிவுகள்

இக்கட்டுரையானது பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் அவர்கள் சமுதாய வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை விவரிக்கின்றன அவர்களின் வாழ்க்கை முறையை நாம் அறியும்போது நாமும் பழமையை மீட்டெடுத்து இயற்கை சார்ந்த வாழ்க்கையை வாழ வழிவகிக்கிறது அத்துடன் அழிந்து வரும் நாகரிகங்கள் காக்கவும். அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதை இக்கட்டுரையில் உள்ளார்ந்த கருத்தாகும்

மேற்கோள்கள்


*தமிழ் நாடன்,தமிழ்நாட்டு மலைவாழ் பழங்குடியின மக்கள், சேலம் மாவட்ட ஓவியர் எழுத்தாளர் மன்றம் ,சேலம் ,1988.*

*ச.பால நாகம்மாள் ,கார்ட்டர் இன மக்களும் வாழ்வியலும் ,கே ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் ,மலர் -1 ,இதழ் -4, ஏப்ரல் 2017 ,issn- 2454 - 3993.*

*ர.ரேகா ,சமுதாய மொழியியல் நோக்கில் காட்டுநாயக்கர்கள் பழங்குடியினர் ஓர் ஆய்வு ,மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை ,செப்டம்பர் 2020.*

*முனைவர் கு.செந்தில் ,பழங்குடியினர் பண்பாடும் மருத்துவமும், பாவேந்தர் பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி ,மாத்தூர் ,சாண்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்வுகள் ,மலர் -2,இதழ் -4,ஏப்ரல் 2018 issn-2454-39.*

*Mrs.Umamaheswaei, Dr.Mrs.Jayasudha, A Study on Socio Economic Problems of Malayali tribes in Jawadhu Hills, D.K.M College , Vellor,2020 JETR Oct 2020,Vol-7, Issu-10 (ISSN 2349-5162).*

*K.Shenbaham, Culture and life style of Paliyan Tribes at Palani Hills Dindugal District , Shrimathi Indhira Gandhi College, Trichy, International Journal of Humanities and Social Science Research Vol-2, Iss-3, Feb 2016, pp.37-40. ISSN-2455-2070*

*A.Muniyandi, Social customs of paliyan tribal women in Dindugal District, Madurai Kamaraj University, Madurai, Vol-2. No-4, April 2015.*

*N.Asha Devi, E.M.G Yadhava college, Madurai, India, International journal of business and Economics Research. Vol-5, No-1, March 2019, pp 456-460, ISSN-2455-3921.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********